**<u>IN THE COURT OF THE PRINCIPALDISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.221/2015**

Deposition of **<u>D.W.2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. M. Kamatchi, Gr. III Bench Clerk of this court, on 10.01.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பாலச்சந்திரன் Father's Name : பெரியசாமி

துவக்க நேரம்: 12.30 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) இந்த வழக்கின் 3-ம் பிரதிவாதியின் பொன்னம்மாளின் மகனா நான் என்றால் ஆமாம். எனது தாயார் உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். எனது தாயார் உடல்நிலை சரியில்லாததததால்தான் எனது தாயாருக்கு பதிலாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று எனது எழுத்துமூல சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அதை எழுதவில்லை.

2) கடந்த 25.09.1950 தேதியிட்ட தாவா முதலாவது அயிட்ட சொத்தை யார் வாங்கியதாக நான் சொல்கிறேன் என்றால் சுப்புராயஉடையார் என்பவரிடமிருந்து தங்கவேல் என்பவர் கிரையம் வாங்கினர். என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில், 2-வது பத்தியில் சுப்புராயஉடையார் கடந்த 25.09.1950-ல் தாவா 1-வது அயிட்ட சொத்தை கிரையம் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனால் தங்கவேல் உடையார் எந்த வருடத்தில் தாவா முதலாவது அயிட்ட சொத்தை கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.221/2015, Dt.10.01.2025.

3) தாவா சொத்தின் 2-வது அயிட்டத்தில் கண்டுள்ள தடத்திற்கு கிழபுறத்தில் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் கிழபுறத்தில் ராஜவீதி உள்ளதா என்றால் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தாயாருக்கு சார்பாக தாக்கல் செய்துள்ளேனா 3-ம் நபராக தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது தாயாருக்கு சார்பாக தாக்கல் செய்துள்ளேன். எனது தாயாருக்கு சார்பாக எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளதாக இந்த வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4) நீதிமன்ற உத்தரவின்படி, நீதிமன்ற ஆணையர், நிலஅளவையருடன் தாவா சொத்தை பார்வையிட்டபொழுது நான் அங்குயிருந்தேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அளவீடு செய்து முடிக்கும்வரை நான் தாவா சொத்திடம்தான் இருந்தேன் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையும், வரைபடத்தையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் வழக்கறிஞர்மூலம் தெரிந்துகொண்டேன்.

5) நீதிமன்ற ஆணையர் அறிக்கை, புலவரைபடம், ஆணையர் மாதிரிவரைபடம் ஆகியவற்றை எங்கள் தரப்பு வழக்கறிஞர் என்னிடம் காண்பித்தார் என்றால் ஆமாம். ஆணையர் மாதிரிவரைபடத்தின்படி குப்புசாமி ரெட்டியார் வீட்டின் தென்புறத்தில் என்னுடைய சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் தென்புறத்தில் அப்பாவு வீடு ரோட்டை ஒட்டி அமைந்துள்ளது என்றால் ஆமாம். ஆணையர் மாதிரிவரைபடத்தில், எனது வீட்டிற்கும், அப்பாவு வீட்டிற்கும் தென்வடலாக செல்லும் வண்டிப்பாதையிலிருந்து (2 வது அயிட்ட சொத்து) தடம் செல்வதாக குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால் தடம் உள்ளது ஆனால் வரைபடத்தில் காட்டப்படவில்லை.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.221/2015, Dt.10.01.2025.

6) எனது வீட்டிற்கு கிழபுறத்தில் பெரிய அளவில் ராஜவீதி உள்ளது என்றாலும் அந்த ராஜவீதியைத்தான் நாங்கள் பயன்படுத்துகிறோம் என்றாலும் 2-வது அயிட்ட சொத்திலுள்ள வண்டிப்பாதையை நாங்கள் பயன்படுத்தவில்லை என்றாலும் ராஜவீதியை நாங்கள் நடைப்பாதைக்காக பயன்படுத்து வருகிறோம் எங்கள் வீட்டிற்கு மேற்கில் உள்ள வண்டிப்பாதையில் எங்களுடைய வண்டிவாகனங்களை ஓட்டிச்சென்று திரும்ப இதே வண்டிப்பாதை வழியாக வருவோம். கடந்த 2015-ம் ஆண்டு தோட்டத்தில் உள்ள வீட்டிற்கு குடியேறிவிட்டோம். அதன்பிறகு இந்த 2-வது அயிட்ட சொத்திலுள்ள வண்டிப்பாதையில் வாதி செங்கல் போட்டு நிரப்பிவிட்டார். இதுகுறித்து நான் தாசில்தாரிடம் மனு கொடுத்தேன். தாசில்தார், இந்த 2-வது அயிட்ட சொத்து அரசுக்கு சொந்தமானது என்றும் பொது வழி என்றும் சொல்லி ஆவணத்தை கொடுத்தார் அதனை நான் இந்த வழக்கில் கொடுத்துள்ளேன்.

7) 2-வது அயிட்ட சொத்தான வண்டிப்பாதையை, வாதி செங்கல் போட்டு நிரப்பிவிட்டதாக நான் காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. தாசில்தாரிடம் மனு கொடுத்துள்ளேன். தாவா 2-வது அயிட்ட சொத்து பொதுபாதை என்பதற்கு ஏதேனும் வருவாய்த்துறை ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வருவாய்த்துறை ஆவணங்கள் கொடுக்கவில்லை. என்னுடைய கிரைய ஆவணம், மூலஆவணம் ஆகியவற்றை கொடுத்துள்ளேன்.

8) தாவா 2-வது அயிட்ட சொத்து, நத்தம் பட்டா என்றாலும் இது பொது வழி அல்ல என்றாலும் உண்மையில் இது பொதுவழியாக இருந்தால் அடங்கல் கணக்கில் பொது வழி என்று குறிப்பிட்டு காட்டப்பட்டிருக்கும் என்றாலும் ஆனால் இந்த வண்டிப்பாதை நத்தம் பட்டா என்பதால்தான் அரசாங்கம் கணக்கில் அவ்வாறு குறிப்பிட்டு எதுவும் எழுதப்படவில்லை என்றாலும் வழக்கு தொடர்வதற்கு முன்பு அடங்கல் கணக்கு இருந்தது.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.221/2015, Dt.10.01.2025.

அந்த அடங்கல் கணக்கில் பொது வழி என்றுதான் இருந்தது. அதன்பிறகு வாதி, அவர் பெயருக்கு UDR பட்டா வாங்கிகொண்டார்.

9) எனது வீட்டின் வடபுறத்தில் குப்புசாமி ரெட்டியார் வீடு உள்ளது என்றால் சரிதான். குப்புசாமி ரெட்டியார் வீட்டிற்கு வடபுறத்தில் வாதி வீடு உள்ளது என்றால் ஆமாம். வாதியின் வீட்டிற்கும், குப்புசாமி ரெட்டியார் வீட்டிற்கும் இடையில் ராஜவீதிக்கு செல்வதற்காக 6 அடி சந்து உள்ளது. நான் சொல்லும் 6 அடி சந்தின் சர்வே எண் என்ன என்றால் நியாபகம் இல்லை.

10) வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்தபொழுது, இருப்பதாகச்சொல்லும் 6 அடி சந்தின் சர்வே எண் என்ன என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை அந்த சந்தை அடைத்துவிட்டார்கள். தாவா 2-வது அயிட்ட சொத்தில் வாதி செங்கலை போட்டு வண்டிப்பாதையை அடைத்துவிட்டார் என்பதாக சொல்லி, வண்டிப்பாதையில் உள்ள செங்கலை அகற்ற வேண்டுமென்று வாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாசில்தாரிடம் முறையிட்டேன்.

11) மாட்டுவண்டி என்ன பொருட்களை ஏற்றிவந்து வீட்டில் இறக்குவோம் என்றால் மாட்டின் தீவனம் இறக்குவோம், ஏற்றியும் செல்வோம். வழக்கு 2-வது அயிட்டத்தில் உள்ள வண்டிப்பாதையின் அகலம் 3.4 மீட்டர் என்பதாலும் இந்த பாதையில் மாட்டுவண்டியை ஓட்டிக்கொண்டு உள்ளே சென்று திருப்ப முடியாது என்றாலும் நான் வண்டியை இந்த பாதையில் ஓட்டிச்செல்வதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மாட்டுவண்டியை பின்புறமாக ஓட்டிச்சென்று எனது வீட்டில் நிறுத்தி பொருள் இறக்கி, ஏற்றிச்செல்வேன்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.221/2015, Dt.10.01.2025.

12) வாதி 2-வது அயிட்ட சொத்தின் வழியாக சென்று 1-வது அயிட்ட சொத்தை அடைவார் என்றாலும் வேறுபாதை இல்லை என்றாலும் வாதி அவரது வீட்டிற்கு தென்புறத்திலியிருந்த சந்தை அடைத்துவிட்டதால் அவர் கிழக்கு திசையாக ராஜவீதியை சென்ற அடையமுடியாது என்பதால் தற்பொழுது வழக்கு 2-வது அயிட்ட சொத்தின் வழியாக வாதி அவரது வீட்டிற்கு சென்றுவருகிறார்.

13) பிரதிவாதிகள் அனைவரும் ராஜவீதியையும், தம்மம்பட்டி - கெங்கவல்லி தார்சாலையையும் தடமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும் ஆனால் வாதி தாவா சொத்தின் 2-வது அயிட்ட சொத்தை மட்டும்தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும் வாதிக்கு வேறு வழி இல்லை என்றாலும் சரிதான். வாதியின் தடபாத்திய அனுபவத்தை நாங்கள் தடை செய்யவில்லை ஆனால் இந்த பாதை எல்லோரும் பயன்படுத்தும் பாதை பொதுவான பாதை.

14) பிரதிவாதிகளாகிய நாங்கள் தாவா 2-வது அயிட்ட சொத்தின் வண்டிவாகனங்களை நிறுத்திவிட்டார். வாதி அவரது வீட்டிற்கு செல்ல வழியே இல்லை மற்றும் வழி தடைபடும் என்றால் சரியல்ல. வாதியின் வழி தடைபடாது. நாங்கள் 2-வது அயிட்ட சொத்தின் வாதியின் அனுபவத்தை தடை செய்ததால்தான் இந்த வழக்கை வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 01.30 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal Distrit Munsif, Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.221/2015, Dt.10.01.2025.